கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2012/2013
(யூன்/யூலை 2015)

# FA 1212 Introduction to Technological Art

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் வினா உள்ளடங்கலாக எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

---

01.(I) "தொழில்நுட்பக்கலை" என்னும் பதம் சுட்டும் அர்த்தத்தை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

(II) தொழில்நுட்பக் கலைகள் நான்கினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(III) தொழில்நுட்பக் கலைகளில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அது தொழில்நுட்பக் கலையாகக் கொள்ளப்படுவதற்கான காரணங்களை ஆதாரப்படுத்துக. (15 புள்ளிகள்)

(IV) "நுண்கலைகளில் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு அவற்றின் கலையாக்கம், இரசனை என்னும் இரு நிலைகளிலும் சமகாலத்தில் அடிப்படையாக விளங்குகின்றது." விளக்குக. (15 புள்ளிகள்)

02.'டிஜிட்டல்' (Digital) தொழில்நுட்பம் புகைப்படக்கலையின் வளர்ச்சியில் ஏற்படுத்தியுள்ள அடிப்படையான மாற்றங்களை விளக்குக. (30 புள்ளிகள்)

03.(I) சினிமாக்கலை நாடகக்கலையில் இருந்து எவ்வெவ் அடிப்படைகளில் வேறுபடுகின்றது. (10 புள்ளிகள்)

(II) சினிமாவில் பயன்படுத்தப்படும் 'ஷொட்ஸ்'களை (shots) குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றான close up ஷொட்ஸ்களின் முக்கியத்துவத்தை தருக. (20 புள்ளிகள்)

04.சினிமாவில் ஒலி தொழில்நுட்பத்தின் அறிமுகத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் தருக. (30 புள்ளிகள்)

05.(I)நவீன தொழில்நுட்ப விருத்தியால் வானொலி பெற்ற வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுக. (10 புள்ளிகள்)

(II) மக்கள் நிலைப்பட்ட ஆர்வத்தை தம்வசம் ஈர்த்துக்கொள்ள வானொலி ஒலிபரப்புச் சேவையில் கையாளப்படும் நுட்பங்களை உமக்கு பரிட்சயமான ஒரு வானொலி ஒலிபரப்பை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

*****